**புலமைச் சொத்துக்கள் நிதியம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

புலமைச் சொத்துக்கள் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை

மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 6,359,198 பெறுமதியான அலுவலக பொருத்துகள் மற்றும் புத்தகங்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன், அரச துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மீள்மதிப்பீடுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது இந்த தகவல்களை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புலமைச்சொத்து ஆதன விடயத்திற்குரிய புத்தகமொன்று சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு அவற்றுள் 3,000 புத்தகங்களை அச்சிடுவதற்கு மற்றும் மொழிபெயர்ப்பு செலவினம் ரூபா 1,628,423 ஆன தொகை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கிடைத்திருந்தது. அந்த பெறுவனவுகள் நிதிய வருமானம் அல்லது செலவினமொன்றாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | உலக புலமைச் சொத்து தினத்திற்காக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக புத்தகமொன்றை அச்சிடுவதற்கு செலவினத்தை தீர்ப்பனவு செய்வற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த பொது வைப்புக் கணக்கை பயன்படுத்தி அந்த பணி மேற்கொள்ளப்படும் என்பது. | அனைத்து பெறுவனவுகள் மற்றும் செலவினங்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க மற்றும் 2022 திசெம்பர் 20 ஆந் திகதிய 01/2020 (ii) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சேவைகளை வழங்குவதற்காக அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிக்காத அனைத்து அரச நிறுவனங்களும் கட்டணங்களை திருத்தியமைக்க வேண்டும் என்ற போதிலும், அலுவலகம் கட்டணங்களை திருத்தியமைத்து வர்த்தமானியில் பிரகடனம் செய்திருந்தது. | கட்டண திருத்தம் தொடர்பான அமைச்சரவைப் விஞ்ஞாபனம் மற்றும் வர்த்தமானி அறிவித்தல் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கு 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும், கட்டணத் திருத்தத்திற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 308,424,933 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 174,567,112 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 133,857,821 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 137,902,566 இனால் அதிகரித்தமை முக்கியமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணியின் உரித்தினை சுவீகரிக்காது புலமை சொத்து விற்பனை மேம்படுத்தல் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 22.29 மில்லியனான செலவினம் நடைமுறை அல்லாத சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த கட்டிடம் அமைந்துள்ள காணி நகர அபிவிருத்தி அதிகாரசபை சுவீகரித்திருந்தது. கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகையை மீளாய்வாண்டின் போது தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது. | புலமை ஆதன விற்பனை மேம்படுத்தல் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகையை மீளளிப்பு செய்வதற்கு உரியதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளரிடமிருந்து ஆவணங்களை கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள போதிலும், முன்னேற்றமொன்று இல்லாத காரணத்தால் அந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்கு உரியதாக தற்போதைய நிலைமை விசாரித்து நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது என்பது. | நிலத்தை உரிமையாக்காமல் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்பதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் அந்த தொகையை பெற ஏற்பாடு செய்ய வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர 31 ஆந் திகதி பதிவு செய்திருந்த 3762 வியாபார பண்டக்குறிகளுக்கான விண்ணப்பங்களில் 892 விண்ணப்பங்கள் 1995 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தவை ஆகும். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்களும் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்ட 27 வியாபார பண்டக்குறிக்கான விண்ணப்பங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் | திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால், சேர்ந்திருந்த கடமைகளை குறைந்தபட்ச | பண்டக் குறிகளை பதிவு செய்யும் ஒவ்வொரு படிமுறைகளிலும் ஏற்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனையின் போது பதிவுக்காக 2 முதல் 28 வருட காலம் கடந்திருந்தது. பதிவு செய்யப்பட்ட பிரசைகள் / சேவை பெறுநர் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம், பதிவு செய்யும் ஒவ்வொரு நடைமுறையின் போதும் பரிந்துரை செய்யப்பட்டிருந்த காலம் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், ஒரு வார காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக 8 முதல் 221 மாத காலமும், ஒரு மாத காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக 8 முதல் 94 மாதங்கள் வரையான காலமும், இரு மாதங்களினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக 24 முதல் 192 மாத காலமும், மூன்று மாத காலத்தினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக 10 முதல் 96 மாதங்களுக்கிடைப்பட்ட காலமும் கடந்திருந்தது. | ஊழியர்களுடன் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், இரு முறை பரிசோதனை மேற்கொண்டு பரிசோதனை தீர்மானத்தை விண்ணப்பதாரர்களுக்கு அறிவித்தல் பிரசைகள் சேவை பெறுநர் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் நிறைவேற்ற முடியாத பணியொன்று என்பது. | தாமதங்களுக்கு தாக்கமளிக்கும் காரணங்கள் ஆராயப்பட்டு தீர்வு வழங்கப்பட வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிராகரிக்கப்பட்ட 1,923 பண்டக்குறி விண்ணப்பங்களில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்தில் 62 விண்ணப்பங்கள் மாத்திரம் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், 37 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் திகதி வரையிலும் 5 வருடங்களும், 104 விண்ணப்பங்களுக்காக 3 வருடங்கள் முதல் 4 வருடங்களும், 1,720 விண்ணப்பங்களுக்காக 01 முதல் 02 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமும் விஞ்சியிருந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சிறிது தாமதம் ஏற்பட்டது மற்றும் ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 1000 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்படுவதால் சேர்ந்துள்ள கடமைகளை குறைப்பது கடினமாக இருந்தது. | பண்டக்குறிகளுக்காக முதன்மை மற்றும் இரண்டாம் நிலை சோதனைகளை நடத்தவும் நிராகரிப்பு அல்லது ஏற்பு கடிதங்களை வழங்க எடுக்கும் நேரத்தை குறைக்க வேண்டும். |
| (iii) | 2003 இன் 36 ஆம் இலக்க புலமை ஆதன அதிகாரச்சட்டத்தின் 111(9)(அ) பிரிவு மற்றும் பிரசைகள் / சேவை பெறுநர் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் | சேர்ந்திருந்த பெருமளவான கடமைகள் மற்றும் மிகவும் குறைந்தளவான பதவியணியுடன் கடமைகளை நிறைவேற்றுவதால் | உரிய கட்டணம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் செலுத்தப்பட்டால் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் 04 வார காலத்தினுள் |

| | | | |
|---|---|---|---|
| | விண்ணப்பத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான கட்டணம் உரிய காலப்பகுதியில் செலுத்தப்பட்டால் 04 வாரங்களினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ள போதிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை 690 ஆகும். இந்த 83 மாதிரி விண்ணப்பப்படிவங்களின் மாதிரியொன்று IPAS கட்டமைப்பினை பரிசோதிக்கும் போது அவற்றுள் 35 விண்ணப்பங்கள் 2024 சனவரி 11 ஆந் திகதி வரையிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிராததுடன், அதன் தாமதம் 01 முதல் 13 வருடங்கள் வரையாக காணப்பட்டது. | பிரசைகள்/சேவை பெறுநர் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் பண்டக்குறியீட்டின் பதிவு வரையிலுமான ஒவ்வொரு பணிகளையும் நிறைவேற்றுதல் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பது. | வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய விண்ணப்பங்களில் 12,898 விண்ணப்பங்களின் வியாபார பண்டக்குறி பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார பண்டக்குறிப் பிரிவின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதை தவிர வேறு தீர்வுகள் இல்லை என்பது அமைச்சின முகாமைத்துவ கூட்டத்தில் எழுத்துமூலம் மற்றும் வாய்மொழிமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (v) | 2016 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் வியாபார மற்றும் சேவைகக் குறிகளை சர்வதேச ரீதியாக பதிவு செய்வதற்கான மெட்ரிட் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த துடன், 2018 ஆம் ஆண்டளவில் ரூபா 78 மில்லியனான செலவினம் ஒதுக்கீட்டு சட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மெட்ரிட் அமைப்பில் பிரவேசிக்கும் பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்தமையால் வியாபார | Madrid நெறிமுறை என்பது சிக்கலான சட்ட மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களை உள்ளடக்கிய ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் அபிலாஷைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றும் நிறைவேற்றும் வகையில் புலமைச்சொத்து சட்டத்தை திருத்துவதற்கு சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்படும். | மெட்ரிட் செயற்திட்டத்தை அமுல்படுத்தி பணிடக்குறிகளை சர்வதேச ரீதியில் பதிவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | பண்டக்குறிகளை பதிவு செய்யும் பணிகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | | |
| (இ) | 2023 ஆம் ஆண்டின் போது 416 பேடன்ட் அனுமதிப்பத்திரங்கள் தொடரப்பட்டிருந்துடன், விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் கடந்த 5 வருடங்களாக குறைவடைந்து செல்லும் போக்கு அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, மீளாய்வாண்டின் போது வெளியிடப்பட்ட 200 பேடன்ட் அனுமதிப்பத்திரங்களில் 59 அனுமதிப்பத்திரங்கள் 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலுமான உள்நாட்டு விண்ணப்பங்களுக்கு உரியதாக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் ஆகும். | நாட்டில் நிலவும் பொருளாதார மந்தநிலை காப்புரிமை விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை தொடர்பில் தாக்கமளிக்கலாம் மற்றும் தாக்கல் செய்யப்படும் பல விண்ணப்பங்கள் பிழையானவை, பிழைகள் அறிவிக்கப்பட்டாலும் தொடர்புடைய திருத்தங்கள் தாமதமடைதல், மீள வழங்கப்படும் அறிக்கைகளும் பிழைகளை கொண்டிருத்தல் மற்றும் சிக்கலான விடயங்களுடன் தாக்கல் செய்யப்படுகின்றமையும் அதற்கு காரணமாக அமைந்திருந்தமை. | தாமதத்திற்கான காரணங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டின் போது நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 375,117,275 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 79.84 சதவீதம் முதலீட்டு வட்டியிலும், 20.16 சதவீதம் புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணங்களையும் கொண்டமைந்திருந்தது. அதன் பிரகாரம் புலமைச்சொத்து அதிகாரச்சட்டத்தின் கீழான கட்டணங்களிலிருந்மு உருவாகும் வருமானம் மொத்த வருமானத்தின் குறைவான சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. | முதலீட்டு வருமானம் புலமைச்சொத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் சேவைகளை வழங்கி சேகரிக்கப்படும் வருமானத்துடன் தொடர்பற்றது என்பது. | நிதியத்தின் செயற்பாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |